# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093864

1. District மாவட்டம்: DVAC | PS: காவல்நிலையம்: DVAC, Hqrs | Year ஆண்டு: 2019 | FIR No. மு.த.அ. எண்: 6 | Date நாள்: 25.02.2019

2. (i) Act சட்டம்: Cr PC — Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல்: 10.01.2019 — Date to நாள் வரை: 10.01.2019
   Time Period : நேர அளவு — Time from நேரம் முதல்: 16.00Hrs — Time to நேரம் வரை: 20.20Hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 10.01.2019 — Time நேரம்: 22.00Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 25.02.2019 — Time நேரம்: 17.00Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Written (Computer typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: About 10kms West.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி: Pallavapuram Municipality. Town Planning Section Chrompet Chennai-44
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: K. Murthy
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில்: District Inspection Cell Officer
   (g) Address : முகவரி: District Inspection Cell, Kancheepuram, Kancheepuram District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tmt. V. Jayanthi W/o Manoharan, Town Planning Inspector, Pallavapuram Municipality. IInd Main Road, New Colony, Chrompet, Chennai-44

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   After observing due formalities.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

An amount of Rs 1,00,000/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S. MALARKODI Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Information sent to the Complainant. [signature] 25/2/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 25.02.2019.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 17.15 Hrs.

Name: பெயர் S. MALARKODI.
Rank: நிலை Inspector of Police No. எண்
SIC/DVAC.

**FIR continuation (Column-12)**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு (1) ஆய்வாளர் சோ.மலர்கொடி ஆகிய நான் 25.02.2019 அன்று 16.00 மனியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.கே,மூர்த்தி, பி,ஏ., மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளுர் மாவட்டங்கள், (இருப்பு) காஞ்சிபுரம் என்பவரிடமிருந்து பெற்ற புகார் மனுவினை திரு.வா.பாஸ்கரன், துணை காவல் கண்காணிப்பாளர், சிறப்பு புலான்வுப் பிரிவு-1 சென்னை அவர்கள் மனுவை பரிசீலனை செய்து உத்தரவு பெற்று மனுவின் தன்மைக்கேற்ப 17.00 மணிக்கு வழக்ககு பதிவு செய்து விசாரணை செய்ய அறிவுறுத்தியதின் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண் 6/2019 பிரிவு 102 கு.வி.மு.ச 1973 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.கே.மூர்த்தி, பி.ஏ., மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளுர் மாவட்டங்கள், (இருப்பு) காஞ்சிபுரம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. ந.க.எண்.25/2019/அ, நாள் - 10.01.2019 அய்யா, பொருள் - சென்னை-44, குரோம்பேட்டை, 2வது மெயின் ரோடு, நியூ காலனி, பல்லவபுரம் பெருநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் நகரமைப்பு பிரிவில் (Town Planning Section) மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை நாள். 10.01.2019 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக. காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு, ஊழல் தடுப்பு மற்றும் கன்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தனிக்கை 10.01.2019-ம் தேதி மாலை 4 மணிமுதல் இரவு 8.20 மணிவரை சென்னை-44, குரோம்பேட்டை, 2வது மெயின் ரோடு, நியூ காலனி, பல்லவபுரம் பெருநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் நகரமைப்பு பிரிவில் (Town Planning Section) மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த இரு துறை திடீர் கூட்டு தணிக்கை நடவடிக்கையின் செயல்முறை ஆணை மற்றும் கணக்கில் வராத கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,00,000/-ஐ (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மேல் நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கூட்டுத் தணிக்கை செயல் முறை ஆணையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் நம்பிக்கைக்குரிய, (ஒப்பம்/-XXX கே.மூர்த்தி) 10.01.2019. மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளுர் மாவட்டங்கள், (இருப்பு) காஞ்சிபுரம்.

இணைப்பு (1) செயல் முறை ஆணை (2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,00,000/- (ஒரு லட்சம் ரூபாய்) (3) வாக்குமூலங்கள் மற்றும் பிற ஆவணங்கள். காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்புப் புலனாய்வுக்குழு காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (10.01.2019) சென்னை-44, குரோம்பேட்டை, 2வது மெயின் ரோடு, நியூ காலனி, பல்லவபுரம் பெருநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் நகரமைப்பு பிரிவில் (Town Planning Section) மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை. இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: 1. திருமதி.கே.மூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள், காஞ்சிபுரம். 2.திரு.V.பாஸ்கரன், காவல் துணைக் கண்காணிப்பாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,சென்னை-16, 3.திரு.தி.கந்தசாமி, காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. 4.திரு.S.வள்ளிநாயகம், காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. 5.திரு.G.லாரன்ஸ், காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. 6.திருமதி.சோ.மலர்கொடி, காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, 7.திருமதி.ஜே.கிறிஸ்டி, காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. 8.திருமதி.கே.எஸ்.அனிதா, காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. சென்னை-44, குரோம்பேட்டை, 2வது மெயின் ரோடு, நியூ காலனி, பல்லவபுரம் பெருநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் நகரமைப்புப் பிரிவில் (Town Planning Section) பணிபுரியும் திருமதி.V.ஜெயந்தி, நகரமைப்பு ஆய்வாளர்-2 (நேமிலிச்சேரி, ஜமீன் பல்லாவரத்தின் ஒரு பகுதி மற்றும் அஸ்தினாபுரம் கிராமங்கள்) என்பவர் பொதுமக்களிடம் இருந்து வரும் கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி கோரும் மனுக்கள், மனைகளின் உட்பிரிவு ஆகியவற்றை ஆய்வு செய்து ஆய்வறிக்கை சமர்ப்பிக்கவும், பொதுமக்களிடம் மனை வரன்முறை திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களை தல ஆய்வு செய்து பரிந்துரை செய்வதற்கும் கையூட்டாக பணம் பெறுவதாக வந்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினருடன் திடீர் கூட்டுத் தணிக்கை இன்று (10.01.2019) மாலை சுமார் 16.00

மணியளவில் மேற்கொள்ளப்பட்டது. சென்னை-44, குரோம்பேட்டை, 2வது மெயின் ரோடு, நியூ காலனி, பல்லவபுரம் பெருநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் நகரமைப்பு பிரிவு (Town Planning Section) அலுவலகம் முதல் தளத்தில் இயங்கி வருகிறது. இந்த வளாகத்தில் மெயின் கேட் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இந்த பல்லவபுரம் பெருநகராட்சி அதன் தெற்கே பேங்க் ஆப் பரோடா வங்கி, குரோம்பேட் கிளை அமைந்துள்ளது. இவ்வளாகத்தின் மெயின் கேட் உள்ளே நுழைந்ததும் தெற்கே பல்லவபுரம் தாலுகா அலுவலகமும் வடக்கே பல்லவபுரம் பெருநகராட்சி அலுவலகம் அமைந்துள்ளது. பல்லவபுரம் பெருநகராட்சி அலுவலகத்தின் முகப்பு வாசல் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. முகப்பு வாசலிலிருந்து உள்ளே நுழைந்ததும் வலது பக்கம் கிழக்கே பல்லவபுரம் பெருநகராட்சி அலுவலக ஆணையாளர் திரு.எம்.செந்தில் முருகன் என்பவரது அறையும், இடது பக்க மேற்கே பொதுப்பிரிவு அறையும் அமைந்துள்ளது. மேலும் முதல் தளத்திற்கு ஏறும் படிக்கட்டின் இடது பக்கம் நகராட்சி தகவல் மைய அறையும், வலது பக்கம் சமுதாய அமைப்பாளர் அறையும் அமைந்துள்ளது. முதல் தளத்தின் உள்ளே நுழைந்ததும் நேர் எதிரில் பொது சுகாதாரப்பிரிவு அலுவலகமும் அதற்கு மேற்கில் நகர மன்ற கூடமும் அமைந்துள்ளது. கிழக்கே நகரமைப்பு ஆய்வாளர் அலுவலகமும், அதனைத் தொடர்ந்து நகரமைப்பு ஆய்வாளர்-1 அறை மற்றும் நகரமைப்பு ஆய்வாளர்-2 அறையும் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தின் நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு ஆய்வாளர் அலுவலகத்தில் இரண்டு நபர்கள் இருந்தார்கள். அவர்களை விசாரிக்க அதில் ஒருவர் தனது பெயர் திரு.ஆர்.வெங்கட்ராஜ் த/பெ இராமமூர்த்தி மற்றொருவர் தனது பெயர் திரு.டி.சக்திவேல் த/பெ துரைராஜ் என்றும் தெரிவித்தார்கள். அவர்களை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் விசாரணை செய்ய தான் எண்.25 பஞ்சாயத்து காலனி இராதாநகர் குரோம்பேட்டை சென்னை.44 என்ற விலாசத்தில் வசித்து வருவதாகும் கடந்த 2000-ம் முதல் தான் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வரைபட வரைவாளர் (Licensed Surveyor) என்றும் அவர் தாம்பரம், பல்லாவரம், செம்பாக்கம் நகராட்சிகளின் கட்டிட வரைபடம் வரைந்து தரும் பணியை செய்து வருவதாகவும் தான் தனது வீட்டிலேயே அலுவலகம் வைத்து இப்பணியை செய்து வருவதாகவும் இன்று (10.01.2019) மாலை சுமார் 4 மணியளவில் எனது கட்டிட வரைபட திருத்தம் சம்பந்தமாக நகரமைப்பு ஆய்வாளர்-2 திருமதி.V.ஜெயந்தி அவர்களை அவர்களது அலுவலகத்தில் பார்த்துவிட்டு வரும்போது விஜிலன்ஸ் காவலர்கள் தன்னை அலுவலகத்திலேயே விசாரித்தார்கள் என்றும் தான் மேற்படி வந்த விவரத்தை தெரிவித்ததாகவும், பின்பு தன்னிடமிருந்த இருந்த பணம் குறித்து கேட்க தன்னிடம் பணம் ஏதும்

இல்லை என்று தெரிவித்தார். மேற்படி நபரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் அவரிடம் பணம் ஏதும் காணப்படவில்லை. இது சம்பந்தமாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் மேற்படி நபரின் பல்லவபுரம் பெருநகராட்சி அலுவலகத்தின் முகப்பு வாசல் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. முகப்பு வாசலிலிருந்து உள்ளே நுழைந்ததும் வலது பக்கம் கிழக்கே பல்லவபுரம் பெருநகராட்சி அலுவலக ஆணையாளர் திரு.எம்.செந்தில் முருகன் என்பவரது அறையும், இடது பக்க மேற்கே பொதுப்பிரிவு அறையும் அமைந்துள்ளது. மேலும் முதல் தளத்திற்கு ஏறும் படிக்கட்டின் இடது பக்கம் நகராட்சி தகவல் மைய அறையும், வலது பக்கம் சமுதாய அமைப்பாளர் அறையும் அமைந்துள்ளது. முதல் தளத்தின் உள்ளே நுழைந்ததும் நேர் எதிரில் பொது சுகாதாரப்பிரிவு அலுவலகமும் அதற்கு மேற்கில் நகர மன்ற கூடமும் அமைந்துள்ளது. கிழக்கே நகரமைப்பு ஆய்வாளர் அலுவலகமும், அதனைத் தொடர்ந்து நகரமைப்பு ஆய்வாளர்-1 அறை மற்றும் நகரமைப்பு ஆய்வாளர்-2 அறையும் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தின் நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு ஆய்வாளர் அலுவலகத்தில் இரண்டு நபர்கள் இருந்தார்கள். அவர்களை விசாரிக்க அதில் ஒருவர் தனது பெயர் திரு.ஆர்.வெங்கட்ராஜ் த/பெ இராமமூர்த்தி மற்றொருவர் தனது பெயர் திரு.டி.சக்திவேல் த/பெ துரைராஜ் என்றும் தெரிவித்தார்கள். அவர்களை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் விசாரணை செய்ய தான் எண்.25 பஞ்சாயத்து காலனி இராதாநகர் குரோம்பேட்டை சென்னை.44 என்ற விலாசத்தில் வசித்து வருவதாகும் கடந்த 2000-ம் முதல் தான் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வரைபட வரைவாளர் (Licensed Surveyor) என்றும் அவர் தாம்பரம், பல்லாவரம், செம்பாக்கம் நகராட்சிகளின் கட்டிட வரைபடம் வரைந்து தரும் பணியை செய்து வருவதாகவும் தான் தனது வீட்டிலேயே அலுவலகம் வைத்து இப்பணியை செய்து வருவதாகவும் இன்று (10.01.2019) மாலை சுமார் 4 மணியளவில் எனது கட்டிட வரைபட திருத்தம் சம்பந்தமாக நகரமைப்பு ஆய்வாளர்-2 திருமதி.V.ஜெயந்தி அவர்களை அவர்களது அலுவலகத்தில் பார்த்துவிட்டு வரும்போது விஜிலன்ஸ் காவலர்கள் தன்னை அலுவலகத்திலேயே விசாரித்தார்கள் என்றும் தான் மேற்படி வந்த விவரத்தை தெரிவித்ததாகவும், பின்பு தன்னிடமிருந்த இருந்த பணம் குறித்து கேட்க தன்னிடம் பணம் ஏதும் இல்லை என்று தெரிவித்தார். மேற்படி நபரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் அவரிடம் பணம் ஏதும் காணப்படவில்லை. இது சம்பந்தமாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் மேற்படி நபரின் வாக்குமூலம் பதிவு செய்து அதை அவருக்கு படித்து காண்பித்து அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது. பின்பு அவ்வலுவலகத்தில் ஆஜரில் இருந்த

நகரமைப்பு ஆய்வாளர்-2 திருமதி.V.ஜெயந்தி அவரது அறையில் வடக்கு நோக்கி அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். நகரமைப்பு ஆய்வாளர் திருமதி.V.ஜெயந்தி என்பவரிடம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திடீர் தணிக்கை குழுவினர் விவரத்தை தெரிவித்து அவருடைய அறை சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனையின்போது அவரிடம் உள்ள பணம் மற்றும் பொருட்களை ஆஜர் செய்யும்படி கேட்க அவர் தனது கைப்பையில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி ரூபாய் நோட்டுக்களை எண்ணிப் பார்த்தபோது ரூ.360/- இருந்தது. இந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்தப் பணம் என்று அவசர தேவைக்கு வைத்திருப்பதாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.360/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. பின்னர் நகரமைப்பு ஆய்வாளர்-2 திருமதி.V.ஜெயந்தி அவர்களிடம் இந்த பணத்தை தவிர வேறு ஏதாவது பணம் மற்றும் பொருள்கள் வைத்துள்ளீர்களா என்று கேட்டதற்கு முதலில் இல்லை என்று மறுத்தார். பின்னர் அவர் அமர்ந்திருந்த இருக்கையின் எதிரே இருந்த அவருடைய மேஜையின் வலது பக்க டிராயரை சோதனை செய்தபோது அதில் ரப்பர் பேன்டில் சுருட்டப்பட்ட நிலையில் 2000 ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அதனை தொடர்ந்து அந்த ரூபாய் நோட்டுக்களை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் எண்ணிப்பார்த்தபோது (50 எண்ணிக்கையில் ரூ.2000/- நோட்டுக்கள் மொத்தம் ரூ.1,00,000 (ரூபாய் ஒரு லட்சம்) இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு. நகராட்சிகளின் கட்டிட வரைபடம் வரைந்து தரும் பணியை செய்து வருவதாகவும் தான் தனது வீட்டிலேயே அலுவலகம் வைத்து இப்பணியை செய்து வருவதாகவும் இன்று (10.01.2019) மாலை சுமார் 4 மணியளவில் எனது கட்டிட வரைபட திருத்தம் சம்பந்தமாக நகரமைப்பு ஆய்வாளர்-2 திருமதி.V.ஜெயந்தி அவர்களை அவர்களது அலுவலகத்தில் பார்த்துவிட்டு வரும்போது விஜிலன்ஸ் காவலர்கள் தன்னை அலுவலகத்திலேயே விசாரித்தார்கள் என்றும் தான் மேற்படி வந்த விவரத்தை தெரிவித்ததாகவும், பின்பு தன்னிடமிருந்த இருந்த பணம் குறித்து கேட்க தன்னிடம் பணம் ஏதும் இல்லை என்று தெரிவித்தார். மேற்படி நபரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் அவரிடம் பணம் ஏதும் காணப்படவில்லை. இது சம்பந்தமாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் மேற்படி நபரின் வாக்குமூலம் பதிவு செய்து அதை அவருக்கு படித்து காண்பித்து அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது. பின்பு அவ்வலுவலகத்தில் ஆஜரில் இருந்த நகரமைப்பு ஆய்வாளர்-2 திருமதி.V.ஜெயந்தி அவரது அறையில் வடக்கு நோக்கி அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். நகரமைப்பு ஆய்வாளர்

திருமதி.V.ஜெயந்தி என்பவரிடம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திடீர் தணிக்கை குழுவினர் விவரத்தை தெரிவித்து அவருடைய அறை சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனையின்போது அவரிடம் உள்ள பணம் மற்றும் பொருட்களை ஆஜர் செய்யும்படி கேட்க அவர் தனது கைப்பையில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி ரூபாய் நோட்டுக்களை எண்ணிப் பார்த்தபோது ரூ.360/- இருந்தது. இந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்தப் பணம் என்று அவசர தேவைக்கு வைத்திருப்பதாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.360/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. பின்னர் நகரமைப்பு ஆய்வாளர்-2 திருமதி.V.ஜெயந்தி அவர்களிடம் இந்த பணத்தை தவிர வேறு ஏதாவது பணம் மற்றும் பொருள்கள் வைத்துள்ளீர்களா என்று கேட்டதற்கு முதலில் இல்லை என்று மறுத்தார். பின்னர் அவர் அமர்ந்திருந்த இருக்கையின் எதிரே இருந்த அவருடைய மேஜையின் வலது பக்க டிராயரை சோதனை செய்தபோது அதில் ரப்பர் பேன்டில் சுருட்டப்பட்ட நிலையில் 2000 ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அதனை தொடர்ந்து அந்த ரூபாய் நோட்டுக்களை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் எண்ணிப்பார்த்தபோது (50 எண்ணிக்கையில் ரூ.2000/- நோட்டுக்கள் மொத்தம் ரூ.1,00,000 (ரூபாய் ஒரு லட்சம்) இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு. ரூபாய் நோட்டுக்களின் மதிப்பும் மற்றும் எண்ணிக்கை விவரம். Rs.2000 x 50 மொத்தம் ரூபாய் Rs.1,00,000.00 மேற்படி பணம் ரூ.1,00,000/- குறித்து நகரமைப்பு ஆய்வாளர்-2 திருமதி.V.ஜெயந்தி அவர்களிடம் கேட்டபோது தனது மர மேஜையின் வலது பக்க டிராயரில் பணம் இருப்பதே தனக்கு தெரியாது என்று தெரிவித்தார். இந்த பணம் இங்கே எப்படி வந்தது என்பது தனக்கு தெரியாது என்றும் யாராவது வைத்திருப்பார்கள் என்று தெரிவித்தார். மேற்படி தொகை ரூ.1,00,000/-க்கான அவரது விளக்கம் முன்னுக்கு பின் முரணாக உள்ளதால் லஞ்சப் பணம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்பு மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.டி.சக்திவேல், த/பெ.துரைராஜ் என்றும் தான் எண்.74, அம்பாள் நகர், 8வது தெரு, கீழ்க்கட்டளை, சென்னை-117 என்ற விலாசத்தில் வசித்து வருவதாகவும் மேலும் தான் Sai Homes என்ற பெயரில் கட்டுமான நிறுவனம் நடத்தி வருவதாகவும் தனது நிறுவனத்திற்கு சொந்தமான காலி மனை கீழ்க்கட்டளை பாரத் நகரில் உள்ளது மேற்படி காலிமனைக்கு அப்ரூவல் மற்றும் ரெகுலேசன் திட்டம் தொடர்பாக இன்று (10.01.2019) மாலை 4 மணியளவில் பல்லாவரம் நகராட்சி அலுவலகம் வந்ததாகவும் அந்த நகர அமைப்பு பிரிவில் இது சம்பந்தமாக விசாரித்ததாகவும் அப்போது லஞ்ச

ஒழிப்பு போலீசார் அலுவலகத்திற்கு வந்து அப்போது அங்கிருந்த தன்னையும் விசாரித்தார்கள். விசாரணையில் தன்னிடம் இருந்த பணம் குறித்து கேட்க தன் வசம் இருந்த ரூ.6,590/- எடுத்து ஆஜர் செய்ததாகவும், அந்த பணத்தைப் பற்றி விவரம் தன்னிடம் கேட்க அது தன்னுடைய சொந்தப் பணம் என்றும் கட்டுமான தொழில் அவசர தேவைக்காக வைத்திருப்பதாக கூறினார். அவருடைய விளக்கம் ஏற்கும்படியாக இருந்ததால் மேற்படி ரூ.6,590/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் மேற்படி நபரின் வாக்குமூலம் பதிவு செய்து அதை அவருக்கு படித்து காண்பித்து அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது. நகரமைப்பு ஆய்வாளர்-2 திருமதி.V.ஜெயந்தி என்பவரின் அறைக்கு மேற்கே பூட்டப்பட்ட நிலையில் ஒரு அறை காணப்பட்டது. அந்த அறை குறித்து திருமதி.V.ஜெயந்தி என்பவரிடம் கேட்டதற்கு அந்த அறையானது மற்றொரு நகரமைப்பு ஆய்வாளர்-1 திரு.கி.கணேசமூர்த்தி என்பவரது அலுவலக அறை எனக் கூறினார். அந்த நகரமைப்பு ஆய்வாளர்-1 திரு.கி.கணேசமூர்த்தி என்பவர் ஒரு வழக்கு சம்மந்தமாக சென்னை உயர்நீதி மன்றம் சென்றிருப்பதாக கூறினார். நகரமைப்பு ஆய்வாளர்-1 திரு.கி.கணேசமூர்த்தி அறை பூட்டப்பட்டிருப்பதால் அதனை சோதனை செய்ய இயலவில்லை. மேற்படி நகரமைப்பு ஆய்வாளர்கள் அறைகளுக்கு எதிரே வடக்கில் நகரமைப்பு அலுவலர் அறை உள்ளது, மேற்படி அறையில் நகரமைப்பு அலுவலர் இருக்கை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி இருக்கையில் நகரமைப்பு அலுவலர் திரு.ஜி.சிவக்குமார் ஆஜரில் இல்லை. இதுகுறித்து நகரமைப்பு ஆய்வாளர்-2 திருமதி.V.ஜெயந்தி என்பவரிடம் கேட்டபோது சென்னை எம்.ஆர்.சி.நகரில் நகர் நிர்வாக அலுவலக புதிய கட்டிட திறப்பு விழாவிற்கு சென்றிருப்பதாக தெரிவித்தார். அவரது செல்போன் எண்ணிற்கு அவரை தொடர்பு கொண்டு அலுவலகத்திற்கு வருமாறு அறிவுறுத்தலின் பேரில் அவர் இன்று மாலை 5 மணியளவில் வந்தடைந்தார். பின்னர் அவரது அலுவலக அறையை சோதனை செய்தபோது எதுவும் கைப்பற்றப்படவில்லை. பல்லவபுரம் பெருநகராட்சி அலுவலக வருகைப் பதிவேட்டினை நகரமைப்பு அலுவலர் காஞ்சிபுர மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரிடம் ஆஜர் செய்தார். அந்த அலுவலக வருகைப்பதிவேட்டை காஞ்சிபுர மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் இன்றைய தேதியில் (10.01.2019) ஆய்வு செய்தபோது திரு.ஜி.சிவக்குமார், நகரமைப்பு அலுவலர் மற்றும் திரு.ஜி.கணேசமூர்த்தி, நகரமைப்பு ஆய்வாளர்-1 ஆகியோர் இன்றைய தேதியில் கையொப்பம் செய்யவில்லை. நகரமைப்பு ஆய்வாளர்-2 திருமதி.V.ஜெயந்தி மற்றும் உதவி பட வரைவாளர் திரு.ஆர்.விக்னேஷவர் ஆகியோர் இன்றைய தேதியில் கையொப்பம் செய்துள்ளனர். இது தொடர்பாக பல்லவபுரம் நகராட்சி நகரமைப்பு

பிரிவு வருகை பதிவேடு 2019 பக்கம் 2ல் காணப்படும் ஜனவரி மாதம் 2019க்கான பதிவேட்டில் நகரமைப்பு அலுவலர் திரு.ஜி.சிவக்குமார் என்பவரிடம் அதில் சான்றொப்பமிட்டு மேற்படி சான்றொப்பமிட்ட நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் இவ்வலுவலகத்தின் Movement Register பற்றி நகரமைப்பு அலுவலரிடம் கேட்க இவ்வலுவலகத்தின் Movement Register பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். நகரமைப்பு அலுவலர் அறைக்கு எதிரே நகரமைப்பு பிரிவு அலுவலகம் உள்ளது. அந்த அலுவலக அறையில் இருந்த இரு நபர்கள் குறித்து ஆய்வுக்குழு அலுவலர் விசாரணை செய்தபோது ஒருவர் தனது பெயர் V.நாகராஜ் என்றும் தான் இந்த அலுவலகத்தில் F1 Clerk ஆக பணிபுரிவதாகவும் அவரிடமிருந்த பணம் குறித்து கேட்க அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.30/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக கூறியதால் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மற்றொரு நபர் தனது பெயர் ஜெய்சங்கர் என்றும் தான் நகரமைப்பு அலுவலரின் நகராட்சி வாகனத்தின் ஓட்டுநர் என்றும் தெரிவித்தார். அவரிடம் பணம் குறித்து கேட்க தன்னிடம் பணம் ஏதும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் இந்த பிரிவில் பணிபுரியும் இதர ஊழியர்கள் குறித்து நகரமைப்பு அலுவலரிடம் கேட்டபோது உதவி படவரைவாளர் திரு.ஆர். விக்னேஷ்வர் மற்றும் F2 Clerk வெங்கடசாமி ஆகியோர் பணிபுரிவதாகவும் மேற்படி நபர்கள் இருவரும் தற்போது பணியில் ஆஜரில் இல்லை என்று தெரிவித்தார். மேலும் உதவி படவரைவாளர் திரு.ஆர். விக்னேஷ்வர் மற்றும் F2 Clerk வெங்கடசாமி ஆகியோர் தன்னிடம் வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ முன் அனுமதி எதுவும் பெறவில்லை என்று நகரமைப்பு அலுவலர் தெரிவித்தார். மேற்படி இருவரையும் நகரமைப்பு அலுவலர் செல்போனில் தொடர்பு கொண்டபோது அவர்கள் இருவரையும் தொடர்பு கொள்ள முடியவில்லை என நகரமைப்பு அலுவலர் தெரிவித்தார். மேற்படி அறையை நகரமைப்பு அலுவலர் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் ஏதும் கைப்பற்றப்படவில்லை. நகரமைப்பு அலுவலர் அறைக்கும் மற்றும் நகரமைப்பு எழுத்தர் அறைக்கும் இடைப்பட்ட பகுதியில் கரும்பச்சை நிறம் கொண்ட இரும்பு பீரோ இருந்தது. அந்த இரும்பு பீரோவின் சாவி குறித்து நகரமைப்பு அலுவலரிடம் கேட்டபோது அந்த பீரோவின் சாவி F2 எழுத்தர் திரு.வெங்கடசாமி வசம் உள்ளதாக தெரிவித்தார். பின்னர் காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரின் அறிவுறுத்தலின்படி நகரமைப்பு அலுவலர் அந்த பீரோவை திறந்து காண்பித்தார். அந்த பீரோவை சோதனை செய்ய இவ்வலுவலக ஆவணங்கள் மட்டும் காணப்பட்டது. மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மனை வரன்முறை பற்றிய

கோப்புகளை பற்றி நகரமைப்பு அலுவலரிடம் கேட்டபோது பல்லவபுரம் பெருநகராட்சிக்கு 741 மனை வரன்முறை மனுக்கள் விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்டதில் 105 மனை வரன்முறை மனுக்களுக்கு மட்டும் இதுவரை அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதர மனை வரன்முறை மனுக்கள் நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்தார். இந்த இரு துறை கூட்டு தணிக்கை இன்று 10.01.2019-ம் தேதி மாலை 20.20 மணியளவில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலக பணிகளுக்கு இடையூறோ, அரசு உடைமைகளுக்கு சேதமோ ஏற்படாத வண்ணம் நடத்திமுடிக்கப்பட்டது. sd/-xxx கே.மூர்த்தி, காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மற்றும்திருவள்ளூர் மாவட்டங்கள், காஞ்சிபுரம். sd/-xxx V.பாஸ்கரன், காவல் துணைக் கண்காணிப்பாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, sd/-xxx தி.கந்தசாமி, காவல் ஆய்வாளர்,சிறப்புப் புலனாய்வுக்குழு,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, sd/-xxx S.வள்ளிநாயகம்,காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு,ஊழல் தடுப்பு மற்றும்கண்காணிப்புத்துறை, சென்னை-16, sd/-xxx G.லாரன்ஸ், காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16 sd/-xxx சோ.மலர்கொடி, காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, sd/-xxx ஜே.கிறிஸ்டி, காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,சென்னை-16, sd/-xxx கே.எஸ்.அனிதா, காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,சென்னை-16. sd/-xxx V.ஜெயந்தி, நகரமைப்பு ஆய்வாளர்-2, பல்லவபுரம் பெருநகராட்சி, குரோம்பேட்டை, சென்னை-44, sd/-xxx .G.சிவக்குமார், நகரமைப்பு அலுவலர், பல்லவபுரம் பெருநகராட்சி, குரோம்பேட்டை, சென்னை-44. sd/-xxx வெங்கட்ராஜ், த/பெ.ராமமூர்த்தி,எண்.25, பஞ்சாயத்து காலனி,ராதா நகர், சென்னை-44 sd/-xxx D.சக்திவேல், த/பெ.துரைராஜ்,எண்.74, அம்பாள் நகர்,8வது தெரு, கீழ்க்கட்டளை, சென்னை-117.

Hon'ble Madam,

The above complaint was registered in V&AC, HQrs, Cr.No.6/AC/2019/HQ, u/s 102 Cr.PC on 25.02.2019 at 17.00 hrs. (Sd.XXX Inspector of Police, SIC-I, V&AC, Chennai-16). The original FIR

along with Complaint enclosed with Joint Surprise Check Proceedings, seized unaccounted monry a sum of Rs.1 lakhs, statement of (1) Tmt.V.Jayanthi, Town Planning Inspector-2, Pallavapuram Municipality @ Chrompet, Chennai-44 (2) Tr.Venkatraj S/o Ramamoorthi (3) Tr.D.Sakthivel S/o Durairaj, Attested Xerox copy of two pages of Attendance Register of Town Planning Section, Pallavapuram Municipality, Chennai submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chengalpattu.

(S.Malarkodi)
Inspector of Police,
Special Investigation Cell-I,
Vigilance and Anti- Corruption,
Chennai-16